253

253

அற்புத

கலியுக முருகன்

கீர்த்தனை

தமிழ்நாட்டூழியன்

புன்னைநகர் ஸ்ரீ A. M. A. அவர்களாலியற்றியது.

சென்னை திருவொற்றியூர்

கலைமகள் விலாஸம் பிரஸில் பதிப்பிக்க பெற்றது

காபிரைட்

1938

விலை அணா 1

உ

வேல்முருகன் துணை

அற்புத கலியுக

முருகன் கீர்த்தனை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1938
MADRAS

ஹரிமாதவனே-என்ற மெட்டு,

இராகம்-பீலு தாளம்-சதுச்ர ஏகம்.

பல்லவி.

ஸ்ரீ காருண்யமே சமுகா ஸ்தலமே
கலியுக காருண்யமே ஸ்ரீ

உபசாரணம்.

சூரனைக் கருவறுத்த சுப்ரமண்யனே—எம்
சுந்தரவடிவழகன் கந்தவேலனே—நம்
சொந்த சிலனே
அருள் தந்த பாலனே
அருமறை லோலனே திருவடிவேலனே ஸ்ரீ

தேனும் தினைமாவையுண்ட தேவருள் சோனே—நம்
தேசிகன் கந்தவேலனின் திவ்ய கீதமே
இதைத் தேடிவோமே
இன்று பாடிவோமே
இனிய கீதமே இன்பம் தருஞ் சீலமே ஸ்ரீ

அத்திமுகனுக்கினைய ஆறுமுகனே—நம்
சத்தியருள் ஈனதெடுத்த ஷண்முகனே
சரவண பவனே
திருவடி வேலனே
திருச்செந்தூரனே அருள் தந்தவனே ஸ்ரீ

பத்மாசுரனை வதைத்த பாலமுருகன்—நம்
சத்திபெற அருளீயும் தேவாறுமுகன்
திகழான சூரன்
அசமங்கமூர் தீரன்
பஞ்சாமிர்தமே பழனி ஸ்தலமே — ஸ்ரீ

கானில் வேங்கைமாமான கந்தவேலனே—நம்
கார்த்திகேயன் என்றதிரு மூர்த்தி சீலனே
கனகா ஸ்தலனே
அனலானவனே — ஸ்ரீ

குயில் கூவுதுபார் பின்குடம் என்ற-மெட்டு

பல்லவி

மயிலாடுதுபார் மயிலாடுதுபார் விரித்தாடுதுபார்
ஆறுமுக சரவண பவகுகனென விரித்தாடுதுபார் — ம

அநுபல்லவி.

சத்தியருள் குமரா தணிகைமாமலைவேலா
உத்தமி கன்சீலா ஓமுருகா வருவாயென — ம

சரணம்

பஞ்சாச்சரனே பக்தவிஜயனே
அஞ்சாத்திரனே அழகிய குருபர வடிவேலாவென—விரித்
தாடுதுபார்
சங்கரனின் மகனே சிங்கார வேலனே
செங்கைபெறு முகனே செழுமிகும் பழனியில் நடமிடும்
குருபர வடிவேலா வென விரித்தாடுதுபார் — ம

திருப்பொரியருள் புகழே திருமலையின் நற்புகழே
திருப்புகழைக்கேட்டருளே திக்கணித்திடும் ஜகத்குரு
மகனென பார்த்து தாவி விரித்தாடுதுபார் — ம

மகாபழனிமலை அதோ-என்ற மெட்டு

பல்லவி.

மகா ஸ்தலமும் அதோ தெரியுது—தெய்வ
சகா—பகா—ரகா திருவாவினன் குடி ம

அநுபல்லவி

சுகாதாரமொழி காட்டியவன் சகா வள முருகாவெனவே ம

சரணம்

முருகனையன்பே படி தொண்டன் புகழ்நுடி
ப்ரணவப்ரசண்டம் பகர்பண்டம் பெறாடி
நீடதிரு அருளம் புஜதவ சரணம்பொருள் சம்ரம குணதாரனே
அசப ரகா யகனை கனே வசமாகேன் தாவிணிசேர் ம

முருகன் காவடிசேகர தேசிக நாதன் நடன
தேவரடியார் மகனே துதிகீதன் மணிமகுட
கந்தாமுருகா குமர சகந்தாவெனவே சுகித்திரு
கசிந்த பண்டப கன்னியரணமனை வசந்தமண்டபவள்ளித்திருமணம்

தாகிட்த கிட்த திமி தரி தரிகிட
தகிட்தளாங்கு குகுந்தரிகிட
தத்தோங்கிட்த தோம்தரிகிட
தகதிரு ததிங்கணதோமெனும் ம

முருகனை திடப்படுத்திக் கொண்டது தரணி க. வே. ஷ. கு
தரும்பழனியிடம் பத்திட்டோங்கும் சுப்ரமணி
விரும்பஜனை கடப்ப புட்பத்தாரணி திடப்பு சத்திக்கிரணி
கங்கண சிதம்பரம் தமிலங்கும் மங்களம்சேர் அருணாசலம்வணங்கும்

ஸரி ரிஸநிதநி நிதபம கமதாகரி ரமகஸ்நி
ரீரீதாநி ஸரிகப மரிகம பதமம பதபதநி
ஸநிசரிஸா நிஸரிரிதநிஸ ரீரிஸநிதப மகரிஸா

முருகன் துதி

இறைவாயில் நின்றழுதாள்-என்ற மெட்டு

இராகம்-தமிர்கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

வருவாய்நீ மயில் வாகனு வள்ளி மோகனு (வ)

அநுபல்லவி

தருவாய்நின் பாதசேவை
தஞ்சமென் றேனே தேவே
தணிகாசலம்வாழ் முருகா ஷண்முகா (வ)

தொகையறு,

இவ்வுகார்த்த கிளியதுபோல் ஏங்கி புலம்புகிறேன்
வீராறு கையனே
ஏழையெனை ரக்ஷித்தாட் கொள்ளுதிது பெரிதோ
எழில்மிகு முருகையனே

பாட்டு

எத்தனைத்தரம் முறைத்தும்
சித்தமிறங் காத்தேனோ
இன்னும்மென் மீதில் வர்மமா இது தர்மமா (வ)

தொகையறு.

ஈராறு செவியிருந்தும் உன் முறையைக் கேளா
திருப்பதிது வஞ்சகமோ
இக்காலக்கலியில் திக்கெல்லாம் புகழும் தன்னப்பனே
எனதுயர் கொஞ்சமோ

பாட்டு.

குஞ்சரி மகிழும் நாதா
தஞ்சைத் துரை ராஜன் கீதா
கொண்டாடும் தொண்டர் நேசனே குன்றில் வாசனே (வ)

காந்திரிக்ஷி என்ற மெட்டு

பல்லவி

ஆண்டவனே அருள் பூண்டவனே — பழனி ஆ

சரணம்

அண்டினோரை யாதரிக்கும் — ஆறுமுக னென்றகூவி
அழைத்தேனடி பணிந்து — அன்புடனெந்தனைத்தாவி
தாண்டவம்புரியுமெந்தன் — தங்கமயில்மீதேறி
தாமதமின்றியேவந்து — தடுத்தாட் கொண்டருள்வாழி
தாருமையா வேல் — தாஙகும்பன்னிருகையா ஆ

என்குறைகள் மெத்தவுண்டு — யெடுத்துரைக்க முடியாது
ஈருறுகையனேஎன்ன் — அருளில்லாமல் தீராது
முன்செய்த தீவினைகள் — மூண்டினதோ சோதியாது
முத்தி வழியைகாட்டு — மோனகுருவேயிப்போது
மால்மருகா யிங்கு ஓடி வா முருகா

கந்தவேலென்ற சொல்லை — கனவிலுமறந்தறியேன்
கார்ப்பாராரித்தவேனோ — கலங்கியிக வாடுகின்றேன்
மைந்தன் கோபாலன்கவி — மனமுருகப்பாடினேன்
மனமிரங்கி எந்தனின் — மனத்துயரை தீர்த்தருளும்
மர்மமாமோ யின்னு — மெந்தன்மேல் வர்மமேனோ

தாதாவேளும் நலமீது தானே என்ற மெட்டு

விகசிதமயில்மேல் — விரைவினில் வருவாய்
வேல்முருகா — திரு
மால் மருகா

இகமதிலுனைத்தொழ — இடாது வருமோ
இறப்பதும் பிறப்பதும் — மினிவந்தணுகுமோ
அகமகிழ்ந்திட வுந்த — னருள் தனைதாவே
மயங்கலாகுமோ — ஏழை
தயங்கலாகுமோ

அன்னை தந்தை குரு தெய்வமும் நீயென
எம்பிரானே உனை
நம்பினேனே

என்குறை தீர்த்திடு ஈராறுகையா
இனியுமென்னை சோதிக்க லாகுமோ ஐயா
கன்னி வள்ளியை காத்த கதிர்வடிவேலா

காருணையா அருள்
தாருமையா

அசுரரையொழித்து அமரரை காத்த
அதிதீரனே மா ஜெய வீரனே
பசுபதிபாலனே பரங்கிரி வாசனே
பக்தனருணகிரிக் கருள் தந்தநேசனே

விசுவாசமுடன் குருமுனிக்குபதேசித்த
வித்தகனே வெகு
உத்தமனே

இந்தையுலகில்யான் சிந்தைகொண்டலைவது
நியாயமாகுமா யான்
சொல்வதழகேகுமா

சுந்தரியாள் மகிழ் ஆறுமுகதேவா
உந்தனை கனவிலும் மறந்திலேன் வாவா
மைந்தன் கோபாலன் கவிக்கிரங்கியே நீவர்
தென்னைகாவா
மகானுபாவா

வாவாவென கூவியழைத்திட்டால் வருவாயோ—என்ற மெட்டு

இராகம்—இந்துஸ்தான் கருட்டி தாளம்-சாப்பு

பல்லவி

வேல் வேல் வேலென வேண்டியழைத்திட்டேன்
விரைவினில் வாமுருகா
ஓடி விரைவினில் வாமுருகா
வேலவா சிலவா வடி வே

அநுபல்லவி

கூர்கூர் கூவினே குமரன் வேலனே
கூவியழைத்தேன் பாவி ஆவிசான்சோர்ந்தமே
வாராயோ வேலனே அருள் தாராயோ சிவா—வடி வேல்

சரணம்

குருபரனே திரு அருமுக வேலனே
கருவில்வினைப்படைத்துக் காட்டோராயோ வித்தை
கார்த்திகே முருகையனே
படைக்கண் பார்த்திடு அருள் செய்யனே
நான்தெருவினில் அலைந்திட
உருவு கொண்டேனே சொல்வாய்
ஜெகஜாலம் செய்யலாகுமோ
என் அபசாரம் சாருமல்லவோ வேல்

துக்கடா

விசித்ர மயில்மிசை கடமிலும் பழனியில்
அகமகிழ்ந் திசைபாட கடவுளே திடமுடன்
வாராயோ வேலா வரந்தாராயோ சிவா
விசித்தமயிலேறி கரத்தினில் வினைத்தாங்க
குறத்தி மணாளனே
திருக்கரத்தில் வேலேந்திய வா—வடி வேல்

வாட்டே

தந்தைக்குபதேசித்த சற்குணவாளன் நீயே
சொந்த அருணகிரி சொற்கனே நீவந்து
இறந்திடு மருளையனே நல்ல [illegible]றந்தமிழை மெய்யனே
தமிழுணர் திருமலைசாமி
அருள்மலை தழிங்கிணைத்தோமேனே
பாட அருள்புரிய வாராயோ வேலா
சகி வார்வோ நலா—வேல்

நீச்ச புருஷர்பேச்சில் பக்காபேர் அழிகள்தான் என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான்; தாளம்-ஏகம்

பல்லவி

அஞ்சாக்ஷர விநோதா   பழனிமாமலை வேலனே
அஞ்சாத தேவர்போற்றும் ... ஆறுமுகவேலனே   அ

அநுபல்லவி

வள்ளிமண வாளனே   மால்மருக வேலவனே
புள்ளிமயில் வாகனனே   வெள்ளிமலை வேலனே   வ
அள்ளிசூழ் சரவணனின்   ஆறுமுகமான வேலவனே   வ

தொகையறு

தேனே தமிழ்த்தமே தெவிட்டாத ஆனந்தமே
கோனே குமரனே குறத்திமணவாளன் நீயே
வள்ளிதெய்வானையுடன் மயிலேறி விளையாடும்
புள்ளிமயில் வாகனன் நீயே

பாட்டு

தேவர்பணியும் வேலனே   ஆவல்கொண்டேன் வேலனே
காவா இவ்வேளைவந்து கார்த்திகனே ஓமுருகா   அ

தொகையறு

புண்ணியமென்னும் இப்பாரத நாட்டினில்
கன்னியனுப் தோன்றிய கந்தவேனே
அன்னியர்களிடம் அடிமைப்படாவண்ணம்
புண்ணியனே நீசாரதகையில்உன்வேலேந்தியே வருவாய்நீயே

பாட்டு

என்றும் காத்திடுவாய் இந்நேர வடிவேலனே   வ

அநுபல்லவி

திருப்பரங்குன்றனே தேவர்களுக்கு உகனே
திருமஞ்சாமிநீதம் ஜெகமெங்குமே விநோதம்   வ

முற்றிற்று

[illegible] பிரஸ், திருவொற்றியூர் சென்னை

திருவெண்காடரென்னும்

பட்டணத்தடிகள்

புராண வசனம்.

இப்புத்தகத்திலடங்கிய விஷயங்கள் யாதெனில்

குபேரன், பட்டணத்தடிகள், சிவசருமர், மருதவாணர், ஷெடி தாலாட்டு, பத்திரகிரியார், வெண்தாயின் சரிதம், சேந்தனுர், வரகுணபாண்டியன், இன்னும் பல விஷயங்களும், வசன நடையாகவும் ஆங்காங்கு பட்டணத்தடிகள் செய்த செய்யுள்களும் திருவிளையாடல்களும் எல்லாம் தெளிவாக தெரிந்துகொள்ளும் பொருட்டு இப்புத்தகம் பதிப்பித்திருக்கிறது

இதன் விலை அணா 2

கலைமகள் விலாச புத்தகசாலை,
திருவொற்றியூர் சென்னை.